# THE PENGAL BUSINESS™

# *Blueprint*

உங்க skill-ஐ Business-ஆ மாற்ற ஒரு தெளிவான roadmap.

உங்களை 24/7 எதிர்பார்க்காத, உங்களுக்கு freedom கொடுக்கிற Business-ஐ உருவாக்குங்க.

Blueprint video-வோட சேர்த்து use பண்ணக்கூடிய Workbook.

# START HERE

**நீங்க அதிக நேரம் வேலை பண்ணணும்னு அவசியம் இல்ல. தெளிவான plan இருந்தா போதும்.**

உங்களுக்கு ஏற்கனவே ஒரு Business இருக்கலாம். இல்லன்னா ஒரு skill மட்டும் இருக்கலாம். எப்படி இருந்தாலும், நீங்க zero-ல இருந்து ஆரம்பிக்கல.

இந்த Workbook-ல 6 Steps-ல ஒரு simple roadmap இருக்கு. Video-வை பாருங்க, அப்புறம் ஒவ்வொரு page-யும் fill பண்ணுங்க. கடைசியில், உங்களுக்கான ஒரு clear Blueprint ஒரே page-ல கிடைக்கும்.

இது சீக்கிரம் பணக்காரர் ஆகுற வழி இல்லை. ஒரு strong Business-ஐ படிப்படியாகத்தான் build பண்ணணும்.

1 → 2 → 3 → 4 → 5 → 6

1 Clarity | 2 Visibility | 3 Validate | 4 Create | 5 Launch | 6 Systemize

## எப்படி use பண்ணணும்

1. Video-வை பாருங்க
2. ஒவ்வொரு page-யும் fill பண்ணுங்க
3. Page 9-ஐ complete பண்ணுங்க

## எனக்கு ஏன் Freedom கொடுக்கிற Business வேணும்?

___

___

___

___

___

___

___

___

___

# STEP 1 CLARITY

## உங்ககிட்ட ஏற்கனவே என்ன இருக்கு?

☐ **Path A: எனக்கு ஏற்கனவே ஒரு Business இருக்கு.**

**நான் இப்போ என்ன offer பண்ணுறேன்?**

**என் customers-க்கு எது ரொம்ப புடிக்கும்?**

**எனக்கு அதிக நேரம் எடுக்கிற வேலை எது?**

☐ **Path B: எனக்கு ஒரு skill, talent அல்லது knowledge இருக்கு.**

**நான் எதுல ரொம்ப நல்லா இருக்கேன்?**

**மத்தவங்க என்கிட்ட எதுக்கு help கேக்குறாங்க?**

**எனக்கு எது easy-ஆ வருது, ஆனா மத்தவங்களுக்கு கஷ்டமா இருக்கு?**

**என் skill / Business**

**மத்தவங்க என்கிட்ட help கேக்குற 3 விஷயங்கள்:**

உதாரணம்: *Make-up artist: "Bride-கள் எந்த look எனக்கு சரியா வரும், skin-ஐ எப்படி ready பண்றதுன்னு கேப்பாங்க."*

# STEP 1 CLARITY PART 2

## யாருக்கு help பண்ணணும்னு ஆசைப்படுறீங்க?

எல்லாருக்குமான Business-ஆ இருந்தா, யாரையும் clear-ஆ reach பண்ண முடியாது.
முதல்ல ஒரே ஒரு person-ஐ தேர்ந்தெடுங்க. அப்புறம் தேவையானா மாத்திக்கலாம்.

| | |
|---|---|
| நான் யாருக்கு help பண்ண விரும்புறேன்? | |
| அவங்க இப்போ எந்த நிலையில இருக்காங்க? | |
| அவங்களோட biggest problem என்ன? | |
| அவங்க என்ன achieve பண்ண விரும்புறாங்க? | |
| இப்போ அவங்கள தடுக்குறது என்ன? | |

உங்க வாக்கியம்:

நான் ______________-க்கு, அவங்க ________________ problem-ஐ solve பண்ணி, ________________ achieve பண்ண help பண்ணுறேன்.

உதாரணம்: Wedding-க்கு ready ஆகுற Tamil brides-க்கு, அவங்களோட saree-க்கும் skin tone-க்கும் suit ஆகுற look கிடைக்காம கஷ்டப்படுறாங்க. அவங்க wedding day-ல confident-ஆ feel பண்ண நான் help பண்ணுறேன்.

குறிப்பு: இது first draft மட்டும் தான். உங்க person-ஐ பத்தி இன்னும் இன்னும் தெரிஞ்சுக்கும்போது, இந்த sentence இன்னும் clear ஆகும்.

# STEP 2 VISIBILITY

Followers தங்களையே உங்க story-ல பார்க்கும்போது தான் connect ஆகுறாங்க.

Followers trust பண்ணுறவங்ககிட்ட தான் வாங்குவாங்க. நிஜமான stories share பண்ணும்போது அந்த trust இன்னும் strong ஆகும்.

## *Story structure 4 steps-ல:*

**HOOK:**
**அவங்க SCROLL பண்ணாம நிறுத்துங்க**

**STORY / PROBLEM:**
**அவங்களுக்கு FAMILIAR-ஆ இருக்குற ஒரு SITUATION-ஐ காட்டுங்க**

**LESSON / SOLUTION:**
**என்ன HELP பண்ணும்னு சொல்லுங்க**

**CTA:**
**அடுத்து என்ன பண்ணணும்னு சொல்லுங்க**

பயிற்சி: உங்க customer-ஓட 3 problems-ஐ எழுதுங்க. ஒவ்வொரு problem-ல இருந்தும் ஒரு Content Idea உருவாக்குங்க.

| என் customer-ஓட problem | என் story / content idea |
| --- | --- |
| | |
| | |
| | |

உதாரணம்: **Problem: "எந்த look எனக்கு நல்லா இருக்கும்?"ன்னு தெரியல.**
**Story Idea: மூணு தடவை look மாத்துன ஒரு bride-ஓட story, அதுல நான் என்ன கத்துக்கிட்டேன்.**

என் experience-ல எந்த situation அல்லது story அவங்களுக்கு help பண்ணும்?

# STEP 3 VALIDATE

## இன்னும் உருவாக்காதீங்க. முதல்ல validate பண்ணுங்க.

நிறைய பெண்கள், யாருக்கும் தேவையில்லாத ஒரு offer-ஐ உருவாக்க வாரக்கணக்காக நேரம் செலவு பண்ணுறாங்க.

முதல்ல interest இருக்கா என்று பாருங்க. அப்புறம் உருவாக்குங்க.




Waitlist-ன்னா: “Ready ஆனதும் எனக்கு சொல்லுங்க”ன்னு interested-ஆ இருக்குறவங்களோட ஒரு small list. அவங்க sign up பண்ணினா, reply பண்ணினா அல்லது questions கேட்டா, அது interest இருக்குறதுக்கான ஒரு signal. இது guarantee இல்லை. ஆனா risk-ஐ குறைக்க உதவும்.

- Saree business: saree styling guide.
- Cake designer: cake ordering and pricing basics.
- Make-up artist: bridal make-up basics workshop.
- Henna: henna starter class.
- Photography: wedding posing guide.
- Aari / embroidery: aari starter workshop.

| என் முதல் offer idea (final இல்லை) |
|---|
| |

| Interest-ஐ எப்படி test பண்ணலாம்? |
|---|
| ☐ Content share பண்ணி கேக்குறது |
| ☐ Freebie உருவாக்குறது |
| ☐ Waitlist create பண்ணுறது |
| ☐ 5 follower-கிட்ட நேரடியா கேக்குறது |

# STEP 4 CREATE and STEP 5 LAUNCH

Follower-க்கு உண்மையிலேயே என்ன வேணும்னு புரிஞ்சுக்கிட்டு அதை உருவாக்குங்க. அப்புறம் உலகத்துக்கு காட்டுங்க.

## Create:

"என் course-ல எத்தனை videos இருக்கு?"ன்னு கேக்காதீங்க. "நான் எந்த problem-ஐ solve பண்ணுறேன்? என் customer-க்கு என்ன result கிடைக்கும்?"ன்னு கேளுங்க.

**என்** offer ____________________**-க்கு** _____________ achieve **பண்ண** help **பண்ணும்**.

**என்** offer**-க்கு அப்புறம் அவங்களால என்ன செய்ய முடியும்**?

**மிகச் சின்ன** first version **என்ன**?

**எனக்கு எந்த** format **சரி**: Workshop, Mini Course, Guide, Template **அல்லது** 1:1 Session?

## Launch:

உங்க முதல் launch சின்னதா இருக்கலாம்.

Warm-up Content → Storytelling → Problem awareness → Offer → CTA → Waitlist-க்கு invite பண்ணுங்க → Launch → முதல் customers → Feedback வாங்குங்க → Improve பண்ணுங்க

**என் முதல்** launch step:

# STEP 6 SYSTEMIZE

## உங்களை 24/7 எதிர்பார்க்காத Business.

Automation-ன்னா ஒண்ணுமே பண்ணாம இருக்கறது இல்லை.

திரும்பத் திரும்ப நடக்குற steps-ஐ, ஒவ்வொரு முறையும் நீங்க இருக்கணும்னு இல்லாத மாதிரி அமைக்கறது.




ஒவ்வொரு தடவையும் நான் இல்லாமலேயே எது வேலை செய்ய முடியும்?

| | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |

உதாரணங்கள்: Sign up பண்ணதும் freebie தானாக அனுப்புறது; payment-க்கு அப்புறம் digital product தானாக அனுப்புறது; பொதுவான கேள்விகளுக்கு guide மூலமா பதில் கிடைக்குறது.

# MY PENGAL BUSINESS™ BLUEPRINT

உங்க முதல் Business roadmap, ஒரே page-ல.

**என் SKILL / BUSINESS**

**என் PERSON**

**நான் SOLVE பண்ணுற PROBLEM**

**அவங்க விரும்புற RESULT**

**என் 3 CONTENT DIRECTIONS (1, 2, 3)**

**என் FREEBIE IDEA**

**என் OFFER IDEA**

**இதை நான் எப்படி VALIDATE பண்ணுவேன்?**

**என் முதல் LAUNCH STEP**

**நான் எதை AUTOMATE பண்ணலாம்?**

## என் அடுத்த ACTION:

# YOUR NEXT STEP

**நீங்க என்ன உருவாக்கலாம்னு இப்போ உங்களுக்கு தெரியும்.**

உங்ககிட்ட ஒரு clear roadmap இருக்கு.

இப்போ உங்க Blueprint-ஐ பாருங்க, எந்த இடத்துல இன்னும் ஆழமா போகணும்னு யோசிங்க.

## எது இன்னும் clear-ஆ இல்லை?

- [ ] என் customer-ம் அவங்களோட problem-ம்
- [ ] என் stories & content
- [ ] என் offer-ஐ validate பண்ணுறது
- [ ] Systems & automation

தேவையான இடத்துல இன்னும் ஆழமா
போங்க – ஒரு நேரத்துல ஒரு step மட்டும்.

